## கருவூலம் மற்றும் கணக்குத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.M.P.சிவன்அருள், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>திருப்பத்தூர் மாவட்டம். | அனைத்து பணம் பெறும்<br>அலுவலர்கள்,<br>திருப்பத்தூர் மாவட்டம். |

ந.க.எண்: 2164/2016/அ1 நாள்: 02.06.2020.

ஐயா/ அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்: | ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டம் (IFHRMS)- 01.07.2020 முதல் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுவது – தொடர்பான அறிவிப்பு - தொடர்பு. |
| பார்வை: | ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை அவர்களின் காணொலிகாட்சி கூட்டம் நாள்: 27.05.2020. |

>><<>><<

அரசின் திட்டமான ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு திட்டம் ஏழு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 01.06.2020 முதல் திருநெல்வேலி, ஈரோடு, திருவாரூர், மதுரை, சார் சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை மாநகராட்சி மற்றும் சார்-சம்பள கணக்கு அலுவலகம், புதுடெல்லி ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

வேலூர் மாவட்ட கருவூல அலகில் (ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம்) 01.07.2020 முதல் **IFHRMS** திட்டம் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று கருவூலக்கணக்குத்துறை ஆணையரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கருவூல கணக்குத்துறை ஆணையரின் அறிவிப்பினைத் தொடர்ந்து முன்ஏற்பாடாக 01.06.2020 முதல் **இணையோட்டம் (Parallel Run)** மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 01.06.2020 முதல் கருவூலத்தில் சமர்பிக்கப்படும் அனைத்து பட்டியல்களும் IFHRMS மென்பொருளிலும் தவறாமல் அனுப்பப்படவேண்டும்.

அதற்கு முன்னதாக திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பணம் பெறும் அலுவலர்களும் கீழ்கண்ட விபரங்களை IFHRMS மென் பொருளில் சரியாக இருப்பதினை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) 2020-2021 – க்கான பட்ஜெட் துறைத் தலைமையிடமிருந்து (HOD) மாவட்ட அளவிலுள்ள பட்ஜெட் கட்டுப்பாடு அலுவலர் (BCO) களுக்கும், BCO விடமிருந்து DDO வரை பட்ஜெட் ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்பட்டதை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.